பக்கங்கள்:-25

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 11 | புதன்கிழமை | 27.12.2023 | அதிர்வு 148

## பகிரங்க விவாதத்துக்கு பயப்படாமல் வாருங்கள்

**தமிழ்க் கட்சிகளுக்கு டக்ளஸ் மீண்டும் அழைப்பு**

(எஸ்.நிதர்ஷன்)

“என்னோடு பகிரங்க விவாதத்துக்குப் பயப்படாமல் வருமாறு தமிழ்க் கட்சிகளுக்கு மீளவும் அழைப்பு 06



# நாட்டைக் காத்த ரணிலே மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டுமாம்

## இது டக்ளஸின் அதிரடி அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

“மீளவும் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதியாக வர வேண்டும். நெருக்கடியான நேரத்தில் இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாத்தவர் ரணில் விக்கிரமசிங்கவே. ஆகையால் மீண்டும் அவரே ஜனாதிபதியாக வர வேண்டும். அவருக்கு ஆதரவை வழங்கி வெற்றி பெறச் செய்வதனூடாகத் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காணலாம்.”

– இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். 07

## தேர்தலில் ரணிலால் வெற்றிபெற முடியாது



**இப்படிக் கூறுகின்றார் விக்கி**

(எஸ்.நிதர்ஷன்)

மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணிலுக்குச் சாதகமாக களமிறங்கினாலே அன்றி ரணில் விக்கிரமசிங்கவால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்று தமிழ் மக்கள் தேசியக் 07



ஜனாதிபதித் தேர்தலா? நாடாளுமன்றத் தேர்தலா? எது முதலில் வரும்? ஜனாதிபதித் தேர்தல் வந்தால் அதில் ரணில் போட்டியிடுவாரா?

– இவைதான் இப்போது அரசியல் வட்டாரங்களில் அதிகம் அடிபடும் கேள்விகள்.

ஆனாலும் பெரும்பாலும் இக்கேள்விகளுக்கான விடைகள் தீர்மானமாகி விட்டன.

ஒன்று – ஜனாதிபதி தேர்தல்தான் முதலில் வரும். 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# பிணைமுறியில் நடந்த மோசடியை விடவும் சீனி வரிக்குறைப்பு மோசடி பாரதூரமானது

## பாட்டலி சம்பிக்க ரணவக்க எம்.பி. தெரிவிப்பு



**“கோட்டபய ராஜபக்ஷ மூர்க்கத்தனமான முறையில் சீனிக்கான வரியை குறைத்ததால் 1600 கோடி ரூபா வரி வருமானத்தை அரசாங்கம் இழந்துள்ளது. பிணைமுறி மோசடியை விடவும் சீனி வரிக்குறைப்பு மோசடி பாரதூரமானது. ஆகவே வரி விவகாரம் தொடர்பில் அறிக்கை விடுவதை மஹிந்த ராஜபக்ஷ தவிர்த்துக் கொள்ள வேண்டும்.”**

**– இவ்வாறு ஐக்கிய மக்கள் குடியரசின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

நாவல பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“வரி அதிகரிப்பு தனது கொள்கையல்ல, வரி குறைப்பு பொருளாதார கொள்கையில் ஒன்றாக காணப்படுகிறது. ஆகவே வரி அதிகரிப்புக்குத் தான் எதிர்ப்பு என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊடக அறிக்கை வெளியிட்டுள்ளார்.

ஆனால், நாடாளுமன்றத்தில் கடந்த 11 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பெறுமதிசேர் வரி சட்டமூலத்துக்கு அவர் ஆதரவாக வாக்களித்தார்.

ஒட்டுமொத்த மக்களையும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் வற் வரியை அதிகரிக்கும் தீர்மானத்துக்கு நாடாளுமன்றத்துக்குள் ஆதரவு வழங்கி விட்டு, நாட்டு மக்கள் மத்தியில் வரி குறைப்புக்கு நாங்கள் எதிர்ப்பு என ராஜபக்ஷர்கள் நாடகத்தை அரங்கேற்றுகிறார்கள்.

ராஜபக்ஷர்களின் வரிக் குறைப்புக் கொள்கையை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தவுடன் சீனிக்கான வரியை 50 ரூபாவில் இருந்து 25 சதமாகக் குறைத்தார். இதன் பயனை நாட்டு மக்கள் எவரும் பெறவில்லை.

ராஜபக்ஷர்களின் செல்வந்த சகாக்கள் 1,600 கோடி ரூபா இலாபமடைந்தார்கள். பிணைமுறி மோசடியை விட சீனிக்கான வரிக் குறைப்பு மோசடி பாரதூரமானது.

தேசியத்தையும், தேசிய உற்பத்திகளையும் பாதுகாப்பது தமது கட்சியின் கொள்கை என்று மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிடுகிறார்கள். ஆங்கிலேயர்களின் ஆட்சியில் கூட இலங்கையின் சுதேச உற்பத்திகள் இல்லாதொழிக்கப்படவில்லை.

ஆனால் கோட்டபய ராஜபக்ஷ எவ்விதமான தூரநோக்கு சிந்தனையும் இல்லாமல் சேதன பசளை திட்டத்தை அறிமுகம் செய்து முழு விவசாயத்துறையையும் இல்லாதொழித்தார்.

பொருளாதாரப் பாதிப்புக்கும் தமக்கும் எவ்வித தொடர்பு மில்லை என்று மஹிந்த ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷர்கள் குறிப்பிட முடியாது. ஏனெனில் ராஜபக்ஷர்கள் பொருளாதார, படுகொலையாளிகள் என்று உயர் நீதிமன்றம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பளித்துள்ளது.

ஆகவே முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவைல் போன்று மஹிந்த ராஜபக்ஷவும் அமைதியாக விலகிக் கொள்ள வேண்டும்.

பொருளாதார முகாமைத்துவத்தில் ராஜபக்ஷர்கள் எடுத்த மூர்க்கத்தனமான தீர்மானங்களினால் கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் மாத்திரம் ஒவ்வொரு தனிநபரும் ஏதாவதொரு வழிமுறையில் ஒரு லட்சம் ரூபா வருமானத்தை இழந்துள்ளனர்.

அத்துடன் ஒரு லட்சம் ரூபா பொருள் மற்றும் சேவைத் துறையில் வரியாக செலுத்தியுள்ளனர். இதற்கு ராஜபக்ஷர்கள் பொறுப்புக் கூற வேண்டும்.

கோட்டபய ராஜபக்ஷ பயணித்த பாதையில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயணிக்கிறார். வரி செலுத்தாமல் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

மதுவரித் திணைக்களம், தேசிய இறைவரித் திணைக்களம் மற்றும் சுங்கத்திணைக்களம் சுமார் 1000 பில்லியன் ரூபா வரை வரி வருமானத்தை அறவிடவில்லை. முறையாக வரி அறவிட்டால் மக்களை நெருக்கடிக்குள்ளாக்க வேண்டிய தேவை ஏற்படாது.”– என்றார்.

# போதைப்பொருள் கடத்தல் பேர்வழிகள் 30 பேர் வெளிநாடுகளில் தலைமறைவு!

## அவர்களைக் கைது செய்ய நடவடிக்கையாம்

வெளிநாடுகளில் தலைமறைவாக வாழும் இலங்கையைச் சேர்ந்த 30 போதைப்பொருள் கடத்தல்காரர்களைக் கைது செய்து இலங்கைக்கு அழைத்து வருவதற்கான விசேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

டுபாயில் தலைமறைவாக வாழும் 29 பாதாள உலக உறுப்பினர்கள் மற்றும் பிரான்ஸில் வசிக்கும் ஒரு பாதாள உலக உறுப்பினர் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், அடுத்த ஆறு மாதங்களில் நாட்டில் பாதாள உலகமும் போதைப்பொருள் கடத்தலும் முற்றாக ஒழிக்கப்படும் எனவும் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.



# மின்சார வேலியில் சிக்கி காட்டு யானை உயிரிழப்பு



அனுராதபுரம் – மதவாச்சி, ஹெலம்பகஸ்வெவெ பகுதியில் மின்சார வேலியில் சிக்கி காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

22 வயது மதிக்கத்தக்க காட்டு யானையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

உழுந்து சேனையொன்றினுள் நுழைய முற்பட்ட போதே மேற்படி யானை மின்சார வேலியில் சிக்கி அது உயிரிழந்துள்ளதாக திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் முன்னெடுத்துள்ளனர்.

# வல்வெட்டித்துறையில் களவு: பெண் உட்பட ஏழு பேர் கைது!

## 16 பவுண் நகைகளும் மீட்பு



(எஸ்.நிதர்ஷன்)

வல்வெட்டித்துறை பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு உள்ளிட்ட சில இடங்களில் இடம்பெற்ற களவுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 16 பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 4 பேர், மன்னாரைச் சேர்ந்த 2 பேர், முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் என 7 பேர் காங்கேசன்துறை குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற களவுச் சம்பவங்களில் ஐந்தரை இலட்சம் ரூபா பணமும் 16 பவுண் நகைகளும் களவு போயுள்ளன.

களவில் ஈடுபட்ட பிரதான சந்தேக நபருக்கு 19 வயது எனவும், அவர் போதைக்கு அடிமையானவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

போதைக்கு அடிமையான திருட்டில் ஈடுபட்ட ஒருவர், நகை அடகு வைத்தவர், நகையை உடமையில் வைத்திருந்தவர்கள் எனப் பெண் உள்ளிட்ட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளுக்குப் பின்னர் சந்தேக நபர்களை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# போயா தினத்தில் பொலிஸாருக்கே பியர் விற்பனை செய்தவர் சிக்கினார்

## மானிப்பாயில் நேற்றிரவு சம்பவம்



நேற்று போயா தினத்தில் பொலிஸாருக்கு பியர் விற்பனை செய்த ஒருவர் கையும் களவுமாக பிடிபட்ட சம்பவம் மானிப்பாய் பகுதியில் இடம்பெற்றது.

மானிப்பாய் ஆனைக்கோட்டை பகுதியில் உள்ள மதுபான விற்பனை நிலையத்திலேயே நேற்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயல்படும் யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மாறுவேடத்தில் சென்ற பொலிஸாருக்கு பியர் விற்பனை செய்த போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட 36 வயதான சந்தேக நபர் மேலதிக நடவடிக்கைக்காக மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.



## யாழ். பல்கலை மாணவி உயிரிழப்பு:

# மரணம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிப்புரை



யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் போது டெங்கு காய்ச்சலால் உயிரிழந்த யாழ். பல்கலைக்கழக மாணவியின் மரணம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பணிப்புரை விடுத்துள்ளார்.

டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த யாழ்.பல்கலைக்கழக மாணவியின் இறுதிக் கிரியைகள் மாவிட்டபுரம் சாயோடையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றன.

யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் இறுதி யாண்டில் கல்வி கற்கும் 25 வயதான மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாணவியின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

காய்ச்சலினால் கடந்த 19 ஆம் திகதி யாழ்.தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த மாணவி, கடந்த 22 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அதனையடுத்து, கடந்த 23 ஆம் திகதி இரவு 11 மணிக்கு மாணவி உயிரிழந்தார்.

இதனிடையே, வாந்தியைக் கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட மருந்தினால் ஏற்பட்ட ஒவ்வாமையே உயிரிழப்பிற்கான காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இந்த நிலையில் பல்கலைக்கழக மாணவியின் மரணம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் அசேல குணவர்தன யாழ். போதனா வைத்தியசாலைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

(மற்றொரு செய்தி 13ஆம் பக்கத்தில்)


## இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இணைந்து



**“தாயகஒலி” பிரதம ஆசிரியர்**

*தம்பு சிவா அவர்களின் (தம்பு.சிவசுப்பிரமணியம்)*

**(அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு**

**நடத்தும்**

# சிறுகதைப் போட்டி

**இருபிரிவுகளாக நடத்தப்படும்**

**(பரிசுத் தொகை 1 இலட்சம்)**

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.
* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.
* **நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

***அனுப்ப வேண்டிய முகவரி :***

இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124

# விஹாரமஹாதேவி பூங்காவில் அநாகரிக சேஷ்டை ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவாம்!



கொழும்பு விஹாரமஹாதேவி பூங்காவில் இளைஞர்கள் அநாகரீமாக நடந்துகொள்கின்றமை தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என குருந்துவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு மாதங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்களின் முறைப்பாட்டு மனுக்கள் பெறப்பட்டுள்ளன எனக் கூறப்படுகிறது.

இது தொடர்பில் கொழும்பு மாநகர சபை விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பூங்காவில் அநாகரீகமாக நடந்துகொள்பவர்கள் பொலிஸாரிடம் அழைத்துச் செல்லப்பட்டு எச்சரிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற இளைஞர்களை விசாரிக்க 80 சிவில் பாதுகாப்பு படை அதிகாரிகள் அனுப்பப்பட்டுள்ளனர்.

# நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக புகை விசுறும் பணியை ஆரம்பிக்கக் கோரிக்கை



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.27

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது நிலவும் அதிகரித்த கொரோணா தொற்றின் காரணமாக, நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்புத்தும் விதத்தில் புகை விசிறல் பணியை முன்னெடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலேயே இம் மாதம் ஆயிரம் நோயாளர்கள் இதுவரை அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவசரமாக நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக புகை விசிறப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதன்காரணமாக முதல் கட்டமாக உடனடியாக மாநகர சபை பிரதேசம் முழுமையாக விசுறுவதோடு இப் பணி ஏனைய பிரதேசங்களிற்கும் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை முன் வைக்கப்படுவது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் த.ஜெயசீலனைத் தொடர்புகொண்டு கேட்டபோது –

இதற்குரிய பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், இயந்திரங்கள் அனைத்தையும் எம்மால் வழங்க முடியும் அதேநேரம் புகைக்குரிய மருந்தைவ்வழங்க சுகாதாரத் திணைக்களமே நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரம் அந்த மருந்துகளிற்கான பணத்தை மாநகர சபை செலுத்தும் எனவும் பதிலளித்தார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளரான த.சத்தியமூர்த்தியை இது தொடர்பில் கேட்ட போது –

குடாநாடு முழுமையாக அவை விசுறப்பட வேண்டிய கட்டாயம் இல்லாதபோதும் மிக அதிகமாக மக்கள் கூடும் இடங்களிற்கும், வைத்தியசாலைகள், பல்கலைக் கழகங்கள், பெரிய பாடசாலைகள் என்பவற்றுடன் டெங்கு நோயாளர் இனம் காணப்படும் பிரதேசத்திலும் புகை விசுறுவது நன்மையானது. இதற்கான மருந்துகளை பெற முயற்சிக்கின்றோம். – என்றார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடுத்தது – அதில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் போட்டியிடுவார்.

இவை இரண்டும் ஏற்கனவே தீர்மானமான விடயங்கள் என்கின்றன ஜனாதிபதி ரணிலுடன் தொடர்புடைய செய்தி வட்டாரங்கள்.

அதே வட்டாரங்கள் இன்னொரு தகவலையும் வெளியிட்டன. ரணிலுக்கு நெருக்கமான தரப்புகளில் இவ்விடயம் அதிகம் பேசப்பட்டு விவாதிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிட்டாலும் தமது வெற்றி உறுதியில்லை என்பது ரணிலுக்கு நன்கு தெரியும். சஜித்தோ வேறு ஒருவரோ தப்பித் தவறி வென்று, அடுத்த ஜனாதிபதியானாலும் அவர் தமக்கு வசதியான நாடாளுமன்றத்தை அமைக்கக் கூடியதான வாய்ப்பை விட்டுச் செல்லாமல் இருக்க வேண்டும் என்று அரசியலில் கிழட்டு நரித் தந்திர சாலியான ரணில் சிந்திக்கின்றாராம்.

அதன்படி –

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகி, வேட்பு மனுக்கள் தாக்கல் செய்த பின்னர் – வாக்களிப்பு நடப்பதற்கு இடையில் – பிரச்சார காலத்தில் –

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைக் கோரக் கூடிய விதத்தில் நாடாளுமன்றத்தைக் கலைப்பது ரணிலின் திட்டம் என்கின்றன அந்த வட்டாரங்கள்.

அதாவது –

முதலில் ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பும், தொடர்ந்து வரும் வாரங்களில் நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பும் நடைபெறக்கூடியதாக நாடாளுமன்றத்தை கலைத்து, பொதுத் தேர்தலுக்கு வழி செய்ய வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கலாகி, அதற்கான வாக்களிப்பு நடப்பதற்கு இடையில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கலாகும் விதத்தில் இதை ஒடுங்குபடுத்திக் கொள்ளுவது.

அதாவது தாம் ஜனாதிபதியாக இருக்கும்போதே நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கலாவதை உறுதி செய்து கொள்வது என்பது ரணிலின் திட்டம்.

இப்படிச் செய்தால் ஜனாதிபதி பதவி அதிகாரங்கள், செல்வாக்கோடு தனது தரப்பு வேட்பாளர்களைத் தான் தேர்ந்து களத்தில் இறக்க முடியும், அத்தோடு அந்த வேட்பாளர்கள் தத்தமது தேர்தல் பிரச்சாரத்தோடு தமது ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார செயற்பாட்டிற்கும் வெற்றிக்கும் உழைப்பர் என்று ரணில் கருதுகிறார். தனக்கு அரசியல் பிரசாரத்திற்கும் தேர்தலுக்கும் வருவர் என்றும் ரணில் நம்புகின்றார். அரசியல் நரித் தந்திரசாலியான ரணில் எதுவும் செய்வார். எப்படியும் செய்வார்.

உள்ளூராட்சித்தேர்தலைநடத்தும்முழு அதிகாரமும் சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவுக்கு என்கின்றன அரசமைப்பும் நாட்டின் சட்டங்களும்.

'அப்படியா?' என்று தெரியாதவர் போல கேட்டுக்கொண்டு, தேர்தலுக்கான நிதி ஒதுக்கீட்டு வயரை வெட்டியதன் மூலம் அந்த அரசமைப்பு ஏற்பாட்டையும் சட்டங்களையும் 'அவுட்'டாக வைத்தவர் ரணில். அவருக்கு இத்தகைய அரசியல் தந்திரங்கள் எல்லாம் வெறும் ஜுஜுபி வேலை...!

## பகிரங்க விவாதத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடுக்கின்றேன்."

– இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாங்கள் முப்பது வருடங்களுக்கு மேலாகச் சொல்லி வருகின்ற எமது அரசியல் நிலைப்பாட்டுக்கு ஏனைய தமிழ்க் கட்சிகளும் தற்போது வந்திருக்கின்றன.

குறிப்பாக இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் மூலமாகக் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தத்தை நாம் ஏற்றுக் கொண்டபோது அதனைத் தும்புத்தடியாலும் தொட மாட்டோம் என்று கூறியவர்கள் இன்றைக்கு அது வேண்டும் எனப் பேச்சு நடத்துகின்றனர்.

இதனூடாக அன்று முதல் இன்று வரை உண்மையையும் சாத்தியமானதையுமே நாம் கூறி வருகின்றோம் என்பதை அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது அன்று நாம் சொன்னதை நிராகரித்தவர்கள் இன்று அதுவே சரியானது என ஏற்றுக்கொண்டுள்ளதுடன் அதனையே வழங்கக் கோருகின்றமை காலம் கடந்த ஞானம்.

எமதுமக்களின்பிரச்சினைகளைமேதாவித்தனத்தோடு அணுக முற்பட்டால் இழப்புத்தான் ஏற்படும். ஆகையால் அதிலிருந்து விடுபட்டு நடைமுறைச் சாத்தியமான வழியில் எடுதுரைத்தால் வெற்றி பெறலாம் என்பது எனது அனுபவம்.

குறிப்பாக 13 ஐ ஏற்றுக்கொண்டு மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கையும் வேலைத்திட்டமும் எம்மிடம் உள்ளது. ஆனால், மற்றக் கட்சிகளிடம் அப்படியான ஒரே கொள்கையோ அல்லது வேலைத்திட்டங்களோ இல்லை.

உண்மையில்மக்களுடையபிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்பதை விட அந்தப் பிரச்சினைகள் தீர்ந்து விடக் கூடாது என்பதற்காகவே அப்பாவி மக்களை ஏமாற்றி உசுப்பேத்துகின்ற சுத்துமாத்து அரசியலைத் தமிழ்க் கட்சிகள் முன்னெடுக்கின்றன.

இங்குள்ள ஒரு எம்.பியுடன் தொலைக் காட்சி நிகழ்வு ஒன்றில் பங்குபற்றியிருந்தபோது நான் பல உண்மைகளை வெளிப்படுத்தியிருந்தேன். குறிப்பாக அவர் சார்ந்த கட்சியின் கொள்கை மற்றும் நிலைப்பாடுகள் தொடர்பிலும், அந்தக் கட்சியின் முன்னைய தலைவர்கள் செய்த விடங்கள் குறித்தும் கூறியிருந்தேன்.

அன்று அவ்வாறு எல்லாம் செயற்பட்டவர்கள்தான் இன்றைக்கு வீர வசனங்களைப் பேசி உசுப்பேத்தும் அரசியலைச் செய்கின்றனர்.

உண்மையாகவே இங்குள்ள தமிழ்க் கட்சிகள் பலவற்றுக்கும் பல தடவைகள் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தபோதும் அவர்கள் விவாதத்துக்கு வருவதில்லை.

நான் பொதுவாக அவர்களுக்கு ஒரு சவால் விடுகின்றேன். எமது கட்சிக்கு நீங்கள் நீண்டகாலமாகச் சேறுபூசி எனது குணாதியங்களைஎச் சிதைக்கும் வகையில் செயற்பட்டு வந்தீர்கள். ஆனால், அதைக் குறுகிய காலத்தில் விளங்கப் படுத்த முடியாது என்பதால் உங்களைப் பகிரங்க விவாதத்துக்கு அழைப்பு விடுத்து வந்தேன். ஆனால், நீங்கள் எவரும் விவாதத்துக்கு வருவதில்லை.

ஏனெனில் பகிரங்கமாக விவாதத்துக்குவந்தால்உங்களின்ஏமாற்றுவித்தைகள் தெரியவந்துவிடும் என

அஞ்சுகின்றீர்கள். அத்தோடு துரோகிப் பட்டமும் உங்களுக்குச் சூட்டப்பட்டுவிடும் எனவும் பயப்படுகின்றீர்கள்.

இன்றைய சூழ்நிலையில் என்னோடு பகிரங்க விவாதத்துக்குப் பயப்படாமல் வருமாறு தமிழ்க் கட்சிகளுக்கு மீளவும் அழைப்பு விடுக்கின்றேன்." – என்றார்.



# யாழ்ப்பாணத்தில் டெங்குக்கு முடிவு கட்ட சகலரும் பொறுப்புணர்ந்து செயற்படுக!

## மாவட்ட அரச அதிபர் அறிவுறுத்து




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகரிக்கும் டெங்கு நோய் தாக்கத்தைப் பார்க்கின்றபோது மிக வேதனையாக இருக்கின்றது என்று தெரிவித்த மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன், இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற தேசிய பாதுகாப்பு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அனர்த்தங்களை நினைவுகூர்ந்து உயிரிழந்தவர்களை அஞ்சலிக்கின்ற ஆழிப்பேரலை போன்ற நினைவு தினங்கள் வருகின்ற போதெல்லாம் கண்கள் கலங்கும்.

அனர்த்தங்களால் பல்வேறு தரப்பினரும் பல வழிகளிலும் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே, அனர்த்தங்கள் ஏற்படாமல் தடுக்க வேண்டிய அதேநேரத்தில் அனர்த்தங்களின்போது எவ்வாறு பாதுகாத்துக் கொள்வதும் முக்கியம்.

குறிப்பாக எமது மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய் அனர்த்தம் ஏற்பட்டிருக்கின்றது. இதனாலும் கூடப் பாதிப்புக்கள் ஏற்படுகின்ற அதேவேளையில் இழப்புக்களும் ஏற்படுகின்றன.

இந்த டெங்கு நிலைமைகள் மேலும் தீவிரமாகாமல் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் தாக்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

டெங்கு தாக்கம் உள்ளிட்ட அனர்த்தங்களின்போது எவ்வளவு அக்கறையாக இருக்கின்றோம் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. தனிப்பட்ட முறையில் கூட இதற்கு நாம் எல்லோரும் பொறுப்பு. இந்த நிலைமைகளைப் பார்க்கின்றபோது அரச அதிபரான எனக்கு மிக வேதனையாக உள்ளது.

ஒவ்வொருவரும் எப்போதும் சமூகம் சூழல் சார்ந்த அக்கறையோடு இருக்க வேண்டும். ஆகையினால் டெங்கு அனர்த்தப் பாதிப்பில் இருந்து எமது சமூகத்தை மீட்டெடுக்க வேண்டும்.

முதலில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியம். அனைவரும் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்." – என்றார்.

## நாட்டைக் காத்த ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தலோ அல்லது வேறு எந்தத் தேர்தல் என்றாலும் நடைபெறுகின்றபோது சுயலாபம் இல்லாமல் மக்கள் நலன் சார்ந்து பேரம் பேசல்களின் அடிப்படையில்தான் எமது முடிவுகளும் எடுக்கப்படும்.

ஆகவே, ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகின்றபோது ஏனைய தமிழ்க் கட்சிகளும் பேரம் பேசல்களின் அடிப்படையில் தமது தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

இவ்வாறான நிலைமையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குப் புதிய தலைவர் தெரிவில் சுமந்திரன் வந்தால் என்ன, சிறிதரன் வந்தால் என்ன என்பதில் பிரச்சினை இல்லை. ஆனால், எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டு இணக்க அரசியலின் அடிப்படையின் பேச்சு ஊடாகத்தான் எதையும் செய்ய முடியும்.

இன்றைய நிலைமையில் மீளவும் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதியாக வர வேண்டும். ஏனெனில் நாடு பொருளாதாரப் பாதிப்பில் சிக்கியிருந்தபோது – பதவியை எடுக்கப் பலரும் மறுதலித்தபோது துணிச்சலாக வந்து பதவியை எடுத்தவர் ரணில் விக்கிரமசிங்கவே.

நெருக்கடியான நேரத்தில் இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாத்தவர் ரணில் விக்கிரமசிங்க. ஆகையால் மீண்டும் அவரே ஜனாதிபதியாக வர வேண்டும். அவருக்கு ஆதரவை வழங்கி வெற்றி பெறச் செய்வதனூடாகத் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காணலாம்." – என்றார்.

## தேர்தலில் ரணிலால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதைய சூழ்நிலையில் 2024 ஆம் ஆண்டு எந்தத் தேர்தல் எப்போது நடக்கும் என்பது தொடர்பில் யாருக்கும் தெரியாது.

முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கு வாய்ப்பு இல்லை. ஏனென்றால் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று அதில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் தற்போதைய ஜனாதிபதியைத் தொடர்ந்து இருக்க அனுமதிக்கமாட்டார்கள் என்ற நிலைப்பாட்டால் ஜனாதிபதித் தேர்தல்தான் முதலில் நடக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது

அப்படி நடந்தால் கூட நான்கு பிரதான கட்சிகளிலும் முக்கியமானவர்கள் வேட்பாளர்களாகக் களமிறங்கக் கூடும். அவ்வாறு களமிறங்கினால் தனி ஒருவர் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியாது போய்விடும்.

அவ்வாறு இருக்கும்போது ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வருவாரா என்ற கேள்வி எழுகின்றது? ரணில் ஜனாதிபதியாக வரவேண்டுமாக இருந்தால் மொட்டுக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சாதகமாக அமைந்தால் மாத்திரமே ரணில் விக்கிரமசிங்கவால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியும்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணிலும் ஜனாதிபதித் தேர்தலும்

வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனத் தாம் எந்த இடத்திலும் கூறவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆளும் கட்சியின் பிரதானிகள் சிலருடனான சந்திப்பில் கூறியுள்ளார்.

கொழும்பில் நத்தார் விடுமுறைக்கு முன்னர் அமைச்சர்கள் சிலருடன் நடந்த உரையாடலின் போது ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார் என்று கூறப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனச் சிலர் கூறும் கதை உண்மையா என அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பினராம்.

இதற்குப் பதிலளித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என இதுவரை கூறவில்லை. போட்டியிடப் போவதில்லை எனவும் கூறவில்லை. எப்படி இருந்தாலும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப மேலும் வேலைத்திட்டங்களை செய்ய வேண்டியுள்ளது. கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை நிறைவு செய்ய வேண்டியுள்ளது. புதிய பொருளாதாரத்தை உருவாக்க வேண்டியுள்ளது. இதற்கு காலம் தேவை" - எனத் தெரிவித்துள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவின் இந்தப் பதில் அவர் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டுத் தொடர்ந்தும் ஜனாதிபதி பதவியில் நீடிக்கும் பகல் கனவில்தான் இருக்கின்றார் என்பதையே காட்டுகின்றது.

அவரின் எடுபிடிகளான அமைச்சர்கள் சிலரும், நிமல் லான்ஸா எம்.பி. போன்றோரும் முன்னெடுக்கும் எடுப்புகள் அவர் தேர்தலில் போட்டியிட்டு வெல்லும் நப்பாசையில் தீவிரமாக உள்ளார் என்பதை நிரூபிக்கும் சாட்சியங்கள்.

பதவி ஆசை பிடித்த அரசியல்வாதிகளில் தவிர்க்கவே முடியாதவர் ரணில் விக்கிரமசிங்க.

இந்த நாட்டின் மிகப் பழமையான கட்சியின் - சுதந்திரம் பெற்ற காலம் முதல் மாறி மாறி அதிகாரத்தில் வீற்றிருக்கும் கட்சியின் - தலைமைப் பதவியை 30 ஆண்டுகளுக்கு மேல் விடாமல் தம்முடன் தக்க வைத்து அதன் பெறுபேறாகக் கட்சியைக் குட்டிச்சுவராக்கி சீரழித்தவர் இந்த ரணில்தான்.

தேசிய மட்டத்தில், எந்த மாவட்டத்திலும் கூட ஓர் எம்.பியைத் தன்னும் தெரிவு செய்ய முடியாத மிக மோசமான படுதோல்விக்கு கட்சியை வழிநடத்திச் சென்ற பின்னரும், கட்சித் தலைமைப் பதவியை விட்டுக் கொடுக்காத பதவி ஆசை பிடித்த ரணில் விக்கிரமசிங்க, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை விட்டுக் கொடுப்பார் என்று சிலர் நம்புவதும், கருதுவதும், செய்திகளை வெளியிடுவதும் வெறும் அசட்டுத்தனம்.

1999 இலும், 2005 இலும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்ட அவர், அதன் பின்னர் 2010, 2015, 2019 ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிடாமல் ஒதுங்கிக் கொடுத்தார், எதிரணி வேட்பாளர்களை ஆதரித்துப் பிரசாரம் செய்தார் என்பவை எல்லாம் உண்மைதான். அது அவர் விரும்பி செய்த விடயங்கள் அல்ல. அவர் விருப்பை மீறி, அவர் மீது திணிக்கப்பட்ட விவகாரங்கள்என்பதுதான்உண்மை. அந்த தேர்தல்களில் அவர் வெற்றியீட்டக் கூடிய வாய்ப்புகள் கிஞ்சித்தும் இருக்கவில்லை, அதற்கான வசீகரமும், மக்கள் கவர்ச்சியும் அவருக்குக் கிடையாது, அவற்றில் போட்டியிட்டால் அவற்றிலும் அவர் தோற்பார், எனவே மாற்று வேட்பாளருக்கு அவர் இடம் அளிப்பதே பொருத்தம் என்று பல தரப்பினராலும் - கட்சிக்குள் இருந்தும், வெளியில் இருந்தும், சில சமயங்களில் நாட்டுக்கு வெளியில் உள்ள சக்திகளாலும் - வழங்கப்பட்ட கடும் அழுத்தங்களை அடுத்து, வேறு வழியின்றி தேர்தலில் இருந்து அவர் விலக வேண்டியவரானார் என்பதே உண்மை.

இப்போது அவர் ஜனாதிபதி. நிறைவேற்றதிகாரத்தை ருசி பார்த்து, அந்தத் துடிப்பில் - மிதப்பில் - இருப்பவர். அவர் இப்போது ஜனாதிபதி என்பதால் வெளி அழுத்தங்களுக்கு அடிபணிய வேண்டிய அவசியம் ரொம்பவும் குறைவு. ஆகவே இந்த முறை ஒற்றைக் காலில் நின்று ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் அவர் களமிறங்குவார்.

ஜனாதிபதிப்பதவியில்இருப்பவர்அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுடன் பதவியை விட்டு வெளியேறியவர் என்றால் அது மஹிந்த ராஜபக்ஷ ஒருவரே. இப்போது அவரது நெருங்கிய சகா ரணில் விக்கிரமசிங்க.

மஹிந்தவுக்கு 2015 ஜனவரியில் நேர்ந்த கதியை அடுத்த ஒக்டோபர் ஜனாதிபதித் தேர்தலில் தாம் சந்திக்கத் தயாராகின்றார் ரணில் விக்கிரமசிங்க என்றே தோன்றுகின்றது.

2015 இல் ஜனாதிபதித் தேர்தலில் தோற்ற மஹிந்த ராஜபக்ஷவை, பாதுகாப்பாக அம்பாந்தோட்டைக்கு அனுப்பி வைக்க விடியும் வேளையில் அலரி மாளிகைக்கு நேரில் சென்றார் ரணில் விக்கிரமசிங்க. இப்போது ஜனாதிபதி மாளிகையில் இருந்து ரணிலை அனுப்பி வைக்க யார் போவார்கள் என்பதுதான் கேள்வி. அடுத்த ஒக்டோபரில் அது தெரியவரும்.




# புலம் பெயர்ந்தும் தமிழர்களின் நலனுக்காக ஓயாது உழைக்கின்ற சட்டவாளர் ரவீந்திரன்

## இன்று எண்பதாவது அகவையில் காலடி எடுத்து வைக்கிறார்



**ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் சிரேஷ்ட சட்டத்தரணி செல்லத்துரை ரவீந்திரன் இன்று தமது எண்பதாவது வயதை எட்டுகின்றார். அதை ஒட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

**இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர் அவர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி.**

**தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட - செயற்படுகின்ற - புலமையாளர். அண்மைய காலத்தில் 'காலைக்கதிர்' நாளிதழ் வாயிலாக பல தொடர் கட்டுரைகளை எழுதி, தமிழ் வாசக உலகில் நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். கலை, இலக்கிய வாதியும் கூட.**

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் உரும்பராய்க்குத் தனித்துவமான இடம் உண்டு. சுதந்திர வேட்கை கனன்ற பூமி அது. அங்கிருந்துதான் விடுதலைப் போராட்ட வேள்வியில் முதல் ஆகுதியான சிவகுமாரன் தோன்றினான்.

அந்த மண்ணில்தான் பிறந்தவர் செல்லதுரை ரவீந்திரன். தியாகி சிவகுமாரனின் தந்தை பொன்னுத்துரை ஆசிரியர், ரவீந்திரனுக்கு நன்கு தெரிந்தவர். மகன் சிவகுமாரன் விடுதலைப் போரின் பக்கம் திசை திரும்பிய போது, வழமையான யாழ்ப்பாணத் தந்தை போல மகனை வெளிநாட்டுக்கு அனுப்பி விடவே சட்டத்தரணி ரவீந்திரனின் ஆதரவைத் தேடினார் பொன்னுதுரை ஆசிரியர். ஆனால் சிவகுமாரன் அதற்கு இணங்கவேயில்லை. தனது ஒரே இலட்சியமான தனித் தமிழீழக் கனவைப் பற்றி எல்லாம் ரவீந்திரனோடு நன்கு மனம் விட்டுப் பேசி நெருங்கிப் பழகினார் சிவகுமாரன்.

ஆரம்பத்தில் சிவகுமாரனின் தனி நாட்டுக் கோரிக்கை ரவீந்திரனை அதிகம் ஈர்க்கவில்லை. எனினும் அதில் அவன் காட்டிய பற்றுறுதி, திடசங்கற்பம், அதையொட்டிய இலட்சிய வேட்கை, அர்ப்பணிப்பு, தியாகம் யாவையும் ரவீந்திரனுக்கு அவன் மீது பெரும் மதிப்பை தந்தன. அவனோடு நெருங்கிப் பழகியவர் ரவீந்திரன். இலங்கை பொலிஸின் சுற்றிவளைப்புக் கைதில் இருந்து தப்புவதற்காக சயனைட் அருந்திய முதல் போராளி சிவகுமாரன்தான். அப்போது ஆஸ்பத்திரி வரை ஊடாடியவர் ரவீந்திரன். அதை ஒட்டிய விடயங்களை "காலைக்கதிர்" நாளிதழில் தான் வரைந்த கட்டுரை தொடரில் பிரஸ்தாபித்திருக்கிறார் ரவீந்திரன்.

ஆரம்ப காலத்திலேயே சிவகுமாரன் போன்றோரின் தொடர்பாடலும், ரவீந்திரனின் முன்மாதிரியான செயல்பாடுகளும், முதல் தலைமுறை தமிழ் போராளிகளுக்கு ஐந்து – பத்து வயது கூடிய அண்ணன் நிலைப்பாட்டில் ரவீந்திரன் மூத்தவராக செயற்பட்டமையும் பிரபாகரன், உமா மகேஸ்வரன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை அனேகமான எல்லாப் போராளிக் குழுக்களின் தலைவர்கள் மீதும் வாஞ்சையையும் செல்வாக்கையும் அன்புரிமையையும் ரவீந்திரனுக்குத் தானாகவே வசீகரித்துத் தந்தன எனலாம்.

அநேகமாக எல்லாப் போராளித் தலைவர்கள் மீதும் செல்வாக்குச் செலுத்தும் அன்புரிமை கொண்டவராக இருந்து, இப்போதும் அதே அரசியல் களத்தில் சுயநல நோக்கில்லாமல், தன்னை முன்னிறுத்தாமல் செயற்பட்டு வரும் ஒருவராக எஞ்சியிருப்பவர் ரவீந்திரன் மட்டுமே என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது.

1971 இல் இளம் தமிழ் சட்டத்தரணியாக கொழும்பில் களமிறங்கிய ரவீந்திரனுக்கு ஆரம்பத்திலேயே அல்பிரெட் தம்பிஐயா (கார்கில்ஸ்), சிலோன் தியேட்டர்ஸ் செல்லமுத்து (புடவை கடை) போன்றோரின் விடயங்களைக் கையாண்ட சட்ட அலுவலகங்களில் தொழில் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின்

(10ஆம் பக்கம் பார்க்க...)

# புலம் பெயர்ந்தும் தமிழர்களின் நலனுக்காக ஓயாது உழைக்கின்ற சட்டவாளர் ரவீந்திரன்

## இன்று எண்பதாவது அகவையில் காலடி எடுத்து வைக்கிறார்

(9ஆம் பக்கத் தொடர்ச்சி...)

குடும்பத்தின் சட்ட விடயங்களை கையாண்டமையால், அவரின் சகோதரர் எச்.டபிள்யூ. ஜெயவர்த்தனா போன்றோருடனும் கூட நெருங்கிப் பழகினார்.

கொழும்பில் சிங்களத் தரப்புகளுடனும் நெருங்கிப் பழகி சட்ட விடயங்களைக் கையாண்ட போதிலும் 1972 அரசமைப்புச் சட்ட உருவாக்கம் இடம்பெற்ற முறைமை மற்றும் 1977 இனக் கலவரம் ஆகியன ரவீந்திரனை தன்னாய்வு செய்யத் தூண்டின.

அதன் விளைவு தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் (**Tamil Refugees Rehabilitation Organization - TRRO**) உருவாக்கத்தில் அவரை முழுமையாக பங்களிப்பு செய்ய வைத்தது. அகதிகளை வன்னியில் கென்ற், டொலர், நாவலர் பண்ணைகளில் மீள்குடியேற்றும் பணிகளில் முழுமையாக ஈடுபட வைத்தது.

அதுவேதான் பிரபாகரன், உமாமேஸ்வரனில் இருந்து டக்ளஸ் தேவானந்தா வரை பின்னாளில் பல இயக்கங்களின் மூத்த தலைவர்களாக உருவெடுத்த பலரை அவருடன் ஒட்டி உறவாடும் நிலைமையை ஏற்படுத்தின.

1977 கலவரங்களை ஒட்டிய சன்சோனிக் கமிஷன் விசாரணைகளிலும் TRRO சார்பில் பிரசன்னமாகி முக்கிய – காத்திர – பங்களித்தார் ரவீந்திரன். அமிர்தலிங்கத்திற்கும் ஏனையோருக்கும் எதிரான ட்ரயல் அட் பார் வழக்கிலும் இவர் ஒரு சட்டத்தரணி.

இவற்றினாலும், இயக்கத் தலைவர்களுடனான ஊடாட்டங்கள், அவர்களுக்கு ஆரம்பகட்ட உதவிகளை ஏற்படுத்திக் கொடுத்தமை, பலரையும் தொடர்பு படுத்தி ஒழுங்குப்படுத்தி வசதி செய்தமை என்று பல்வேறு விவகாரங்களினால் புலன் விசாரணையாளர்களின் கைதுக்கும் தொல்லைக்கும் தொடர்ந்து ஆளானார் ரவீந்திரன்.

1983 கலவரங்களின் பின்னர் மீள முடியாத நெருக்கடி ஏற்பட்ட போது, வேறு வழியின்றி இலங்கையை விட்டு வெளியேறி ஆஸ்திரேலியா சென்று சேர்ந்து, அங்கு தமிழ் மக்களுக்கான அரும் பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார் அவர்.

1976 – 1984 இடைப்பட்ட காலங்களில் தனது ஐரோப்பிய விஜயங்களினால் தமிழர் புனர்வாழ்வு கழகம் (பிரித்தானியா), தமிழர் தகவல் நிலையம் (சென்னை) ஆவணக் காப்பகம் என்பவற்றுடன் இணைந்து செயல்பட்டார் ரவீந்திரன்.

அதனால் ஈழ விடுதலைப் போராட்டத்தின் முதல் தலைமுறை சக்திகள் பலவற்றுடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பையும் பேணினார்.

அந்தக் காலத்தில் ஆரம்பத்தில் செயற்பட்ட தமிழ் போராளிகள் குழுக்களை T groups, E groups என்று சிலாகிப்பதுண்டு. "தமிழ்" என முன்னெழுத்துக்களை கொண்ட LTTE, TELO போன்றவை T குரூப். தமிழை முன்னிலைப்படுத்தாமல் இடதுசாரிச் சித்தாந்தங்களில் ஈழப் பேருடன் அமைந்த EROS, EPRLF போன்றவை E குரூப்.

இந்த T குறூப்புகள், E குறூப்புகள் எல்லாவற்றிலும் செல்வாக்கு செலுத்திய ரவீந்திரன் இந்த குழுக்களை ஒன்றுபட்டுச் செயல்பட வைக்கும் இமாலய முயற்சியிலும் பெரும் பகுதி நேரத்தைச் சளைக்காது செலவிட்டவர். அவை குறித்துத் தமது கட்டுரைத் தொடரில் ஆங்காங்கே அவர் தொட்டுச் சென்றிருக்கின்றார்.

திம்புப் பேச்சுக்களின் போதும், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் போதும் கூட, பக்கத்து தரப்புகளில் அவர் கணிசமான பணியாற்றி இருக்கிறார் என அறிந்திருக்கிறேன்.

அதுவே அவரது செல்நெறிப் பாதையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது எனலாம்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பின்னர், அரசியல் ரீதியில் இந்தியாவுடன் இணைந்து பணியாற்றுவதே உசிதமானது என்ற மாறா நிலைப்பாட்டை எடுத்தார் ரவீந்திரன். இன்றும் கூட, அவரது உறுதியான நிலைப்பாடு அதுதான் என்பதை நான் நன்கறிவேன். அதனை இப்போது வரை மாற்றாமல், அஞ்சாமல், தனது எழுத்துகளிலும், பேச்சுக்களிலும் வெளிப்படுத்தும் அவரது உறுதியான பண்பு பெரிதும் மதிக்கத்தக்கது.

இந்த நிலைப்பாடு காரணமாக பின் நாள்களில் விடுதலைப் புலிகளாலும், புகலிட தேசங்களில் புலிகளின் ஆதரவாளர்களாலும் அவர் ஓரம் கட்டப்பட்டார்.

எனினும், அவர் தயங்காது இன்று வரை ஆஸியில் அகதி அந்தஸ்துக் கோரும் நம்மவர்களுக்கான வழக்குகளில் வேற்றுமை பாராது தொடர்ந்தும் கடுமையாக உழைத்துப் பணியாற்றி வருகின்றார். புலிகளுடன் கொள்கை ரீதியான அடிப்படையில் வேறுபட்டாலும், தமது அந்த நிலைப்பாட்டில் உறுதியாகவும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் ரவீந்திரன் இருக்கின்றமையால் ஆஸ்திரேலியாவில் மட்டுமல்ல, புலம்பெயர் தேசம் எங்கும் அவருக்கு ஒரு தனித்துவ மரியாதை உண்டு என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. அதற்காக அவர் புலி எதிர்ப்பு நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவரோ அல்லது ஈடுபட்டவரோ அல்லர் என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

தமிழர் நலனுக்காகப் பல சமரச முயற்சிகளில் தன்னை வெளிப்படுத்தாமல் ஈடுபட்டவர் ரவீந்திரன்.

போர் முடிந்த கையோடு சில சமாதான சமரச முன்னெடுப்புகளுக்காக இந்தியத் தரப்புடன் தொடர்பாடல்களில் ஈடுபட்டார். தமிழர் தகவல் நிலையத்தின் ஏற்பாட்டில் தமிழ்க் கட்சிகள் எல்லாவற்றையும் ஒன்றிணைத்து (கஜேந்திரகுமார் அணியைத் தவிர்த்து) இந்தியாவுக்குத் தமிழர் தரப்பிலிருந்து பொதுவான சமர்ப்பணம் ஒன்றைத் தருவதற்கான முயற்சியை அவர் முன்னெடுத்தார். ஆயினும், இடை நடுவில் ரெலோ அமைப்பு தாங்கள் தனியாக இந்தியாவுக்கு ஒரு சமர்ப்பணம் தரப்போவதாக புறப்பட்டமையால், அந்த முயற்சி தூர்ந்து போனதாக நொந்து கொள்வார் ரவீந்திரன்.

தமிழர் தேசத்துக்கு இன்று ஒரே பக்கபலமாக இருக்கக்கூடியது புலம்பெயர் தரப்புத்தான். ஆனால், அதுவோ நாடுகள் தோறும் பல குழுக்களாக – பல அணிகளாக – பல தரப்புகளாக



– பிரிந்து நின்று அக்கப்போர் செய்து கொண்டிருக்கின்றது. இவை எல்லாம் சேர்ந்து ஒரு கட்டமைப்பாக இயங்க வேண்டியது காலத்தின் கட்டாயம். அது குறித்து இங்கு நமது விமர்சகர்கள் பலரும் எழுதுகின்றார்கள். குறிப்பிடுகின்றார்கள். வலியுறுத்துகின்றார்கள்.

ஆனால் அதை எப்படி முன்னெடுப்பது என்ற வழிவகையை யாரும் வெளிப்படுத்துகின்றார்கள் இல்லை.

அத்தகைய முயற்சியில் – புலம்பெயர் தமிழ் மக்களை ஒன்றிணைத்து, ஒரு கட்டமைப்பாக உறுதியாக இயங்க வைக்கும் எத்தனத்திலும் விருப்பிலும் ஈடுபாட்டிலும் முழு முயற்சியிலும் – சிந்தித்து ஊடாடிக் கொண்டிருக்கின்றார் ரவீந்திரன் என்பதை நான் அறிவேன்.

அதற்கான தகைமையும், பண்பும், பரிச்சயமும், தொடர்பாடல்களும் கொண்டவர் அவர்தான். தமது 80 ஆண்டு கால வாழ்வின் பெரும்பகுதியை தமிழர் நலனுக்காக செலவிட்ட அவர் இந்த முயற்சியையும் வெற்றிகரமாக ஒப்பேற்ற எத்தனிக்க வேண்டும். ஊடகங்களும் புலம்பெயர் தரப்புக்களும் அதற்கு முழு ஒத்துழைப்பை வழங்குவது இன்றைய தேவை என்று கருதுகிறேன்.

அவர் தமது குடும்பத்தாரோடு இனிய வாழ்வு தொடரவும், அவரது எழுத்துப் பணியும் முரசு வாசகர்களுக்கும் தொடர்ந்து கிட்டவும் வாழ்த்துகிறேன்.





# புதுச்செட்டித் தெரு சீரடி சாய்பாபா ஆலயத்தில் ரேயர் ஜயந்தி நிகழ்வு

ஸ்ரீ தத்தாத் ரேயர் ஜயந்தி தினம் கொழும்பு புதுச்செட்டித் தெரு சீரடி சாய்பாபா ஆலயத்தில் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது, ஆலய வளவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குருஸ்தானுக்கு பிரதம அறங்காவலர் கலசாபிஷேகம் செய்து வைத்தார். சட்டத்துறை கலாநிதி ஜே.ம்.சுவாமிநாதன் பாலாபிஷேகத்தை ஆரம்பித்து வைத்தார். பூஜை மற்றும் ஆகம கிரியைகளை பிரம்மஸ்ரீ ஸ்ரீகாந்த சிவாச்சாரியார் மேற்கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.









# சட்டவிரோதமான முறையில் யாழில் மது விற்றவர் கைது!

நேற்று போயா தினத்தில் யாழ்ப்பாண நகரில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்பனை செய்த இடமொன்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி மேனன் தலைமையிலான பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.



யாழ்ப்பாணம் மடம் வீதியில் அரச மதுபானங்களை விற்பனை செய்த 36 வயதான சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் இருந்து 102 மதுபான போத்தல்களைப் பொலிஸார் கைப்பற்றினர்.

# உயரமான கிறிஸ்மஸ் மரம் திருமலைக் கடற்கரையில்!

## ஆயர் நோயெல் இம்மானுவேல் திறந்து வைப்பு

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண வரலாற்றில் மிகவும் உயரமான கிறிஸ்மஸ் மரம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயெல் இம்மானுவேல் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை டச்பே (DUCHBAY) கடற்கரையில் இந்த கிறிஸ்மஸ் மரம் அமைக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 24ஆம் திகதி இரவு இடம்பெற்ற விசேட சமய ஆரா தனை நிகழ்வுகளில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்து கொண்டிருந்தார்.

திருகோணமலை டச்பே (DUCHBAY) கடற்கரையில் அமைக்கப்பட்ட கிறிஸ்மஸ் மரத்தின் முன்னிலையில் இதுவரை 10ஆயி ரத்துக்கும் அதிகமானோர் புகைப்படங்க ளையும் எடுத்துக்கொண்டுள்ளனர்.

இதில் திருகோணமலை மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அது கோரள, மாகாண பிரதம செயலாளர் ஆர். எம்.பி.எஸ்.ரத்நாயக்க, மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி உட்பட திணைக்கள தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.













# கசிப்புக் காய்ச்சிய பெண் உட்பட மூவர் கோப்பாயில் நேற்றுக் கைது





யாழ்ப்பாணம் – கோப்பாய் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு காய்ச்சிய ஒரு பெண் உள்ளிட்ட மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயல்படும் யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேக நபர்களிடம் இருந்து 44 லீற்றர் கசிப்பும் 70லீற்றர் கோடாவும் கைப்பற்றபட்டுள்ளன.

மேலும் ஆறு மதுபானப் போத்தல்களும் கசிப்பு காய்ச்சுவதற்கான உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

மேலதிக விசாரணைக்காக சந்தேக நபர்கள் மூவரும் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கபட்டனர்.

# யாழ். பல்கலை மாணவி உயிரிழப்பு உறவினர் பொலிஸில் முறைப்பாடு!

அண்மையில் உயிரிழந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவியின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாகத் தெரிவித்து குடும்பத்தினரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவி மருந்தின் ஒவ்வாமை காரணமாக உயிரிழந்துள்ள நிலையில், மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக தெரிவித்து உயிரிழந்த மாணவியின் உறவினர்களால் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண்ணுக்கு எவ்விதமான ஒவ்வாமையும் இல்லை எனவும் செலுத்தப்பட்ட ஊசி மருந்து என்ன வென்பது தமக்கு தெரிவிக்கப்படவில்லை எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் இறுதியாண்டில் கல்வி கற்ற குணரத்தினம் சுபீனா என்ற 25 வயதான மாணவி டிசம்பர் 23 ஆம் திகதி உயிரிழந்தார்.

காய்ச்சல் காரணமாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவி, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மாணவிக்கு செலுத்தப்பட்ட மருந்தின் ஒவ்வாமை காரணமாகவே உயிரிழப்பு இடம்பெற்றது என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த மாணவியின் இறுதிக் கிரியை நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## யாழ். ஈ.பி.டி.பி. அலுவலகமான

# சிறிதர் தியேட்டருக்கு சூரிய மின்கலங்கள்!

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், டிச.27

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகமான சிறிதர் தியேட்டருக்கு சூரிய மின்கலங்கள் பொருத்தப்படவுள்ளன.

1996 ஆம் ஆண்டு யாழ் குடாநாடு மீண்டும் இராணுவத்தினர் வசம் வந்த பின்னர் 1997ஆம் ஆண்டு முதல் சிறீதர் தியேட்டர் ஈ.பி.டி.பியின் கட்சி அலுவலகமாக இயங்கி வருகின்ற போதும் தியேட்டர் இன்றுவரை புனரமைக்கப்படவில்லை.

இந்த நிலையில் தியேட்டரின் கூரை மரங்கள் அனைத்தும் பழுதடைந்து காணப்படுவதனால் அவை சீர் செய்யப்பட்டு புதிய சீற்கள் மாற்றப்படவுள்ளன. அச்சமயம் கூரை முழுமையாக சூரிய மின்கலம் பொருத்தப்படவுள்ளது.

இதற்காக மானிப்பாயில் இயங்கும் சூரயமின்கல விற்பனை நிலையத்தில் இருந்து 272 சூரிய மின்கலங்கள் சிறிதர் தியேட்டரில் கொண்டு வந்து இறக்கப்பட்டுள்ளன.

இந்த 272 சூரிய மின்கலங்களையும் பொருத்துவதன் மூலம் தியட்டரில் இயங்கும் அலுவலகத்திற்கான மின் சாரத்தை இலவசமாக பெறுவதோடு எஞ்சிய மின்சாரத்தை இ.மி.சபைக்கும் வழங்கத் திட்டமிடப்படுகின்றது.

சிறிதர் தியேட்டரை 1997இல் ஈ.பி.டி.பி. எடுத்த காலம் முதல் 2020 ஆம் ஆண்டு வரையான மின் கட்டணம் செலுத்தப்படாமல் ஒரு கோடி ரூபாவை தாண்டிய நிலுவை காணப்பட்டது. அத்தொகை தற்போது பகுதி பகுதியாக செலுத்தப்படும் நிலையிலேயே சூரிய மின்கலம் பொருத்தப்படவுள்ளது.




# கற்பிட்டியில் நத்தார் விருந்தில் கான்ஸ்டபிளின் மீது தாக்குதல்

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி, தளுவ – நிர்மலாபுர பிரதேசத்தில் நத்தார் விருந்தில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளான பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் சிகிச்சைக்காக புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் எனப் புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் தப்பிச் சென்றுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.



இந்தப் புதிய பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று முன்தினம் காலை நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் கடமையைப் பொறுப்பேற்றிருந்தார் எனவும், அவர் ஊழல் ஒழிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

நேற்று முன்தினம் இரவு இந்த பொலிஸ் கான்ஸ்டபிள் தனது நண்பர்கள் சிலருடன் விருந்தில் கலந்து கொண்டமையுடன், அந்த விருந்தில் குழுக்களுக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாக்குவாதம் முற்றிய நிலையில், அங்கிருந்த சிலர் பொலிஸ் கான்ஸ்டபிளையும் அவருடன் வந்த நண்பர்களையும் தாக்கியுள்ளனர்.

இதுபற்றி நுரைச்சோலை பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸ் குழு, தாக்குதலுக்கு உள்ளான புதிய பொலிஸ் கான்ஸ்டபிளை சிகிச்சைக்காக வைத்திசாலையில் அனுமதித்துள்ளனர்.




# சர்ச்சைக்குரிய தடுப்பூசி இறக்குமதி விடயம் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் வாக்குமூலம்!

சர்ச்சைக்குரிய இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி இறக்குமதி செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

இதற்காக, குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கொழும்பிலுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் இல்லத்துக்கு நேற்று முற்பகல் சென்றனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த, சர்ச்சைக்குரிய தடுப்பூசியை இறக்குமதி செய்த நிறுவனத்தின் உரிமையாளர் சுகத் ஜானக பெர்னாண்டோ ஆகியோர் முன்னதாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அதேநேரம், இந்தச் சம்பவம் தொடர்பில் மருத்துவ விநியோக பிரிவின் முன்னாள் பணிப்பாளர் வைத்தியர் கபில விக்ரமநாயக்க உள்ளிட்ட நால்வர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# இலங்கை - பிரிட்டன் இடையில் வர்த்தகப் பரிமாற்றம் அதிகரிப்பு

இலங்கை மற்றும் பிரித்தானியாவுக்கு இடையில் 2022 ஜுலை தொடக்கம் 2023 ஜ/ன் வரையான 12 மாதங்களில் இடம்பெற்ற ஏற்றுமதி, இறக்குமதி உள்ளிட்ட வர்த்தகப் பரிமாற்றத்தின் மொத்தப்பெறுமதி 1.4 பில்லியன் ஸ்ரேலிங் பவுண்களாகும்.

இலங்கைக்கும், பிரித்தானியாவுக்கும் இடையில் கடந்த 2022 ஜுலை தொடக்கம் 2023 ஜ/ன் மாதம் வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வர்த்தக மற்றும் முதலீட்டு செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அந்த நாட்டின் வணிகம் மற்றும் வர்த்தகத்துக்கான திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தரவுப் பதிவிலேயே மேற்கண்ட விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அந்த தரவுகளின்படி இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டுடன் முடிவுக்கு வந்த கடந்த 4 காலாண்டுகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் அடங்கிய மொத்த வர்த்தகப் பரிமாற்றத்தின் பெறுமதி 1.4 பில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள் ஆகும்.

கடந்த 2022 இல் இரண்டாம் காலாண்டுடன் முடிவுக்கு வந்த 4 காலாண்டுகளில் பதிவான இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப் பரிமாற்றுத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை 25 மில்லியன் ஸ்ரேலிங் பவுண், அதாவது 1.9 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.



# போண்டா மணியின் குடும்பத்திற்கு வர்த்தகர் வாமதேவன் பண உதவி

(ந.லோகதயாளன்)


யாழ்ப்பாணம், டிச.27

தமிழகத்தில் நோயின் காரணமாக மரணமடைந்த நடிகர் போண்டா மணியின் குடும்பத்திற்கு ஈழத்து வர்த்தகர் இந்தியப் பணத்தில் ஒரு லட்சம் ரூபா நிதி அன்பளிப்பு வழங்கி வைத்தார்.

யாழ்ப்பாணம் வடமராட்சியைச் சொந்த இடமாகக் கொண்ட போண்டா மணி ஈழத்தில் நிலவிய போரின் காரணமாக இடம்பெயர்ந்த சமயம் பெற்றோரை இழந்து, குண்டடிபட்ட நிலையில் வாழ்ந்து, சினிமாவில் நகைச் சுவை நடிகராக நடித்து வந்தார்.

சிறுநீரகப் பாதிப்பிற்குள்ளான அவர் நோயின் காரணமாக உயிரிழந்தார். போண்டா மணியின் குடும்பத்திற்கு யாழ்ப்பாணம் வர்த்தகரான தி.வாமதேவன் (ரி.சி.ரி) ஒரு லட்சம் இந்திய ரூபா அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்த நிதியை சென்னையில் உள்ள அவரது நண்பர் சுரேஸ் லூலம் நேற்றைய தினம் வழங்கி வைத்துள்ளார்.




# வட அந்தமான் கடலில் காற்றுச் சுழற்சி வடக்கு, கிழக்கில் கனமழைக்கு வாய்ப்பு!

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடல் பிராந்தியம் மற்றும் தென் அந்தமான் கடல் பிராந்தியத்தில் ஒரு காற்றுச் சுழற்சியும், வட அந்தமான் கடல் பிராந்தியத்தில் ஒரு காற்றுச் சுழற்சியுமாக நிலநடுக்கோட்டு இந்திய பெருங்கடல் பகுதியில் வெவ்வேறான காற்றுச் சுழற்சிகள் உருவாகியுள்ளன.

மேற்படி இரண்டு காற்றுச் சுழற்சிகளும் தற்போது ஒன்றாக இணைந்து சற்று வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன.

இதன் காரணமாக அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களில் மழை பெய்யும் சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது சில நாள்களுக்குத் தொடரும் சாத்தியம் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அவ்வப்போது இடையிடையே ஓரளவு மழை பொழியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெறுமதி சேர் வரி அதிகரிப்பால் வெதுப்பக தொழிற்துறை பாதிப்பு



எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து வற் என்ற பெறுமதி சேர் வரி அதிகரிக்கப்படவுள்ளமையினால் வெதுப்பக தொழிற்துறையில் உள்ளவர்கள் வெகுவாகப் பாதிப்படைகின்றனர் என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வரி அதிகரிக்கப்பட்டாலும் வெதுப்பக உற்பத்தி பொருள்களின் விலையை அதிகரிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

“தற்போது 15 சதவீதமாக காணப்படுகின்ற வற் வரியின் ஊடாக வெதுப்பக தொழிற்துறை பாதிப்படைந்த நிலைமையில் உள்ளது.

இந்தநிலையில் அதனை 18 சதவீதமாக அதிகரிப்பது மேலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

தற்போதைய நிலையில் புதிய வரித் திருத்தத்துக்கு அமைய வெதுப்பக உற்பத்திகளின் விலை அதிகரிக்கப்படுமாயின் நுகர்வோர் வெகுவாகப் பாதிக்கப்படுவார்கள்.

அத்துடன், வெதுப்பக உற்பத்திகளை கொள்வனவு செய்யும் நுகர்வோரின் எண்ணிக்கையும் வெகுவாக வீழ்ச்சியடையும்.” என்றார்.

# சிறுவர்களிடையே சுவாச நோய்கள் பரவும் அபாயம் குறித்து எச்சரிக்கை

தற்போதைய நாள்களில் சிறுவர்களிடையே சுவாச நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிறுவர்களை சன நெரிசலான இடங்களுக்கு அழைத்துச் செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஜி.விஜேசூரிய அறிவுறுத்தியுள்ளார்.

இயலுமான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் முகக்கவசம் அணியுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.






# சுனாமியால் அழிந்த இரு தேசங்களின் சுதந்திரக் கனவு!

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா -**

இயேசு பாலன் பிறப்பை தேவாலயங்கள் எங்கும் மங்களம் பொங்கும் நிகழ்வுகள், பூஜைகள் நடத்திக் கொண்டாடி மகிழ்ந்து கொண்டிருந்த நேரம். அந்த நேரம் தான் இந்தனோசியா கடலடியில் ஏற்பட்ட பூமித் தட்டுக்களின் உரசல் பூமிப்பந்தையே உலுக்கி இந்து மகா சமுத்திர நீரையே விழுங்கிக் கொள்கிறது.

2004.12.26 அதிகாலை, ஈழத்து நேரம் அதி காலை 6.28 மணியளவில் விழுங்கிய நீரை பூமித் தகடுகள் துப்பிவிட மேலெழுந்த நீர் பெரும் அலை களாகி சுனாமி என்ற சொல்லை ஈழ தேசத்துக்கு அறிமுகப்படுத்துகிறது.

2004 மார்கழி மாத இரவு தனது இருட்டைத் தொலைத்து சூரிய ஒளியால் ஒளிரத் தொடங்கிய அதிகாலை நேரம். பல ஆயிரம் ஆசைகள் நெஞ்சில் நிறைந்து கிடக்கின்றன. எம் வாழ்வுக்கு ஒளி காட்ட பாலன் பிறந்துவிட்டான் என்று எம் ஊர்கள் மட்டுமல்ல உலகமே மகிழ்வில் திளைத்துக் கொண்டிருந்த வேளை யில், ஈழ தேசத்தை போலவே, பல ஆண்டுகளாக ‘ஆச்சே தேசம்’ விடுதலையை மூச்சாக கொண்டு இந்தோனேசியாவுக்கு எதிராகப் போராடி, பின்னர் ஆழிப் பேரலையின் பாரிய அழிவை இதே காலகட் டத்தில் எதிர்கொள்கிறது.



ஈழத்தில் கரையோர மக்கள் காலை வேளை நத்தார் கொண்டாட்டத்தில் இருந்த மக்கள் கடற்கரை நீர் உள் இழுக்கப்படுவதை கண்டு என்ன என்று அறிய முன் கடலில் பாரிய அலை ஒன்று கரை நோக்கி வருவதை கண்டு திகைத்து நின்றார்கள்.

## தமிழர் தேச கட்டுமான சிதைவு

நீண்ட காலமாக விடுதலைக்காக போராடிய தமிழ் மக்கள் “தேசம்” எனும் கட்டுமானத்துக்குள் வந்த காலகட்டமே 2003-2005 ஆகும். விடுதலையை மூச்சாக கொண்டு போராடிய தமிழர் தேசம் பின்னர் ஆழிப் பேரலையின் பாரிய அழிவை இந்தக் கால கட்டத்தில் எதிர்கொள்கிறது.

ஈழத்தின் கீழ்நில கடற்கரைப் பகுதிகள் யாவும் சுனாமி அலைகளால் தாக்கப்பட்டு பாரிய சேதம் ஏற்படுகிறது. கிட்டத்தட்ட 30000 மக்கள் இயற்கை யின் சீற்றத்தால் உயிரிழந்து, பல ஆயிரம் மக்கள் காயமடைந்து, பல கோடி உடமைகளை இழந்து போன அந்த நொடி இன்றும் இரத்த வாடையோடு நகர்கிறது.

தமிழ் இனத்தை மட்டுமல்லாது பல்லின மக்களை யும் ஏதுமற்ற ஏதிலிகளாக்கிய சுனாமி, சிறிய இடை வெளியில் மீண்டும் ஒரு முறை தாக்கி விட்டு சென்ற போது மக்கள் செய்வதறியாது திகைத்து நின்றார்கள். கடல் அலையால் தூக்கி எறியப்பட்டவர்கள் கையில் கிடைத்தவற்றை பிடித்து கொண்டு தம்மை காத்து கொண் டார்கள். பனை, தென்னை, மரங்களின் கொப்பு களைப் பிடித்துக்கொண்டு காத்து கொண்டவர்கள் பயங்கர காயங்களாலும் பாதிக்கப்பட்டார்கள்.

## சுனாமியில் அழிந்த ஆச்சே தேசம்

பல ஆண்டுகளாக ஆச்சே தேசம் விடுதலையை மூச்சாக கொண்டு இந்தோனேசியாவுக்கு எதிராகப் போராடி, பின்னர் ஆழிப் பேரலையின் பாரிய அழிவால்

தொடர்ச்சி ▼

# சுனாமியால் அழிந்த இரு தேசங்களின் சுதந்திரக் கனவு!

தொடர்ச்சி ▲

சர்வதேச மத்தியஸ்தத்துடன் சமாதானத்தை 2005 ஏற்றுக் கொண்டது.

ஆச்சே தேசத்தின் விடுதலைக்கான போராட்டம் 1990களின் இறுதியிலும் 2000 இன் ஆரம்ப காலப் பகுதியிலும் மிகத் தீவிரம் அடைந்திருந்தது. ஆயினும் 2004 டிசெம்பர் 26 இல் ஏற்பட்ட ஆழிப்பேரலையின் அழிவுகள் ஆச்சேனியர்களையும் இந்தோனேசியர்களையும் சமாதானத்தை நோக்கிச் சிந்திக்க வைத்தது.

அச்சே மக்கள் சுயநிர்ணய உரிமைக்காகவும் சுதேச அடையாளததுக்காகவும் சுமார் 29 வருடங்கள் தொடர்ந்து போராடினர். தற்போது இந்தோனேசியாவின் ஆதிக்கத்தில் உள்ள ஆச்சே மாநிலத்தின் வடக்குப் பகுதியில் சுமத்திரா தீவும் தெற்குப் பகுதியிலே இந்து சமுத்திரமும் அமையப்பெற்றுள்ளன.

### அச்சே சுனாமி பேரழிவு

ஆச்சே இயக்க அறிக்கைகளின் மூலம், 2003-2005 அரச தாக்குதலின் போது அதன் இயக்க வலிமையில் 50 வீதத்தை இழந்தது என்று ஒப்புக் கொண்டது. 2004 ஆம் ஆண்டு சுனாமி பேரழிவு ஆச்சே மாகாணத்தை தாக்கியபோதும் கிளர்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

டிசெம்பர் 2004 இல் பேரழிவை ஏற்படுத்திய சுனாமிக்குப் பிறகு, ஆச்சே இயக்கம் ஒருதலைப் பட்சமான போர் நிறுத்தத்தை அறிவித்தது. சர்வ தேச சமூகத்தின் உறுப்பினர்கள் மோதலைத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

சுனாமிக்குப் பிறகு, இந்தோனேசிய அரசு ஆச்சே பகுதியைச் சர்வதேச நிவாரண முயற்சிகளுக்குத் திறந்தது. சுனாமியின் பின்னர் இந்த மோதல் சர்வதேச கவனத்தை ஈர்த்தது. முந்தைய சமாதான முயற்சிகள் பலவும் தோல்வியடைந்தன, ஆனால் சுனாமியின் பின் இரு தரப்பும் மோதலில் இராணுவ ரீதியாக வெற்றி பெற இயலாமை மற்றும், குறிப்பாக, இந்தோனேசியாவில் அமைதியைப் பாதுகாக்க ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோவின் விருப்பம் உட்பட பல காரணங்களால், ஒரு சமாதான உடன்படிக்கை எட்டப் பட்டது. இதன்மூலம் 2004 இந்தியப் பெருங்கடல் பூகம்பத்தின் விளைவுடன் ஆச்சேயில் 30 ஆண்டு கால மோதலை முடிவுக்குக் கொண்டு வந்தது.

### சமாதானப் பேச்சுவார்த்தை

29 வருட போருக்குப் பிறகு 2005. சுஹார்டோவுக் குப் பிந்தைய இந்தோனேசியா மற்றும் தாராளவாத - ஜனநாயக சீர்திருத்த காலம் ஆகும். அத்துடன் இந்தோனேசிய இராணுவத்தில் பதவி மாற்றங்கள் சமாதானப் பேச்சுக்களுக்கு மிகவும் சாதகமான சூழலை உருவாக்க உதவின.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோ மற்றும் துணைத் தலைவர் ஜுசுஃப் கல்லா ஆகியோரின் அமைதி தீர்வுக்கான பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கவை.

அதே நேரத்தில், ஆச்சே இயக்கத் தலைமை தனக்குக் கிடைக்கக் கூடிய விருப்பங்களை மறு பரிசீலனை செய்தது, மேலும் இந்தோனேசிய இராணுவம் கிளர்ச்சி இயக்கத்தைக் கணிசமான அழுத்தத் துக்கு உட்படுத்தியது. இது ஆச்சே இயக்கம் முழு சுதந்திரம் இல்லாத முடிவை ஏற்றுக்கொள்ள ஊக்கப் படுத்தியது.

விடுதலை வேண்டிப் போராடி அழிந்த மற்றைய இனங்களுக்கும் அச்சே மக்களின் போராட்டம் சான்று பகரும் உதாராணமாக அமைகிறது. கொடிய போரால் சிந்திய குருதிகளுக்கும், சிதைவடைந்த தேசத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்க 2004 இந்தியப் பெருங்கடல் ஆழிப்பேரலை சுனாமியின் அழிவுகளும், ஆச்சே விடுதலைக்கான ஆயுத போராட்டத்தை நிறுத்த வழி கோலியது என்பது உண்மையே.

ஈழ தேசத்தை போலவே, பல ஆண்டுகளாக ஆச்சே தேசம் விடுதலையை மூச்சாக கொண்டு இந்தோனேசியாவுக்கு எதிராகப் போராடியது. ஆழிப் பேரலையின் பாரிய அழிவு இந்த இரு தேசங்களின் சுதந்திரக் கனவு பேரலைகளில் மூழ்கிப்போனமை வரலாற்றுத் துயராகும்.



# கல்லடி திருச்செந்தூரில் சுனாமி நினைவு கூரல்!



(பழுவூரான்)

கல்லடி திருச்செந்தூரில் ஆழிப் பேரலை நினைவுத் தூபியில் நினைவு கூரல் இன்று இடம்பெற்றது.

சுனாமி நிகழ்ந்து 19 ஆவது ஆண்டை நினைவு கூரும் வகையில் இந்த நிகழ்வு நேற்றுச் செவ்வாய்க் கிழமை (26) மட்டக்களப்பு திருச்செந் தூர் நினைவுத் தூபியில் இடம்பெற் றது.

இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை, மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச் சர் சிவனேசதுரை சந்திரகாந்தன், முன் னாள் கிழக்கு மாகாண சபை உறுப் பினர்களான இரா.துரைரத்தினம், பூபாலபிள்ளை பிரசாந்தன் உட்பட மதத் தலைவர்கள், சிவில் சமூக ஏற்பாட்டா ளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அதிதிகள் மற்றும் பொதுமக்களால் அகல் விளக்கேற் றப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட் டது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் தமது உறவுகளை இழந்த தாய், தந்தையர்கள், மற்றும் உறவினர்கள் கதறியழ நினைவு கூரப்பட்டது.





# சுனாமியால் உயிரிழந்த மக்களுக்காக மாளிகைக்காடு பள்ளியில் பிரார்த்தனை

(நூருல் ஹுதா உமர்)

சுனாமி பேரலையில் உயிரிழந்த மக்களுக்காக அவர்களது ஆத்மா சாந்தியடைய வேண்டி மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் நம் பிக்கையாளர் சபையினர் 19 ஆவது வருடமாகவும் துஆ பிரார்த்தனை நேற்று நடத்தப்பட்டது.

இதன்போது நினைவுரையும், குர்ஆன் தமாம் செய்யும் நிகழ்வும் இடம்பெற்றன.

மாளிகைக்காடு அந் நூர் ஜும்மா பள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளர் ஏ. பௌசர் வழிகாட்டலில் உப தலைவர் ஏ.எம். ஜாஹீரின் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் மாளிகைக் காடு அந் நூர் ஜும்மா பள்ளிவாசல் பிரதம இமாம் ஏ.எல்.எம். மின்ஹாஜ் (உஸ்மானி) தலைமையிலான உலமாக் கள், மதரசா மாணவர்கள் கலந்து



கொண்டு துஆ பிரார்த்தனை, நினை வுரை, குர்ஆன் தமாம் செய்யும் நிகழ்வு ஆகியவற்றை மேற்கொண்டனர்.

மாளிகைக்காடு அந் நூர் ஜும்மா பள்ளிவாசல் உப செயலாளர் யூ.எல். என். ஹுதா நெறிப்படுத்திய இந்த நிகழ் வில் உலமாக்கள், அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வீ. ஜெகதீசன், காரைதீவு பிரதேச செயலர் எஸ். ஜெக ராஜன், காரைதீவு பிரதேச சபைச் செயலர் ஏ.சுந்தரகுமார், கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை ஓய்வுபெற்ற அதிபர் சட்டத்தரணி எம்.சி.ஆதம்பாவா, மாளிகைக் காடு கிழக்கு கிராம நிலதாரி ஏ.எம். நஜீம் உட்பட கல்விமான்கள், மதரஸத்துல் இர்ஸாதிய்யா மாணவர் கள், மாளிகைக்காடு அந் நூர் ஜும்மா பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை செயலர் எப்.எம். றௌபி, பொருளாளர் ஏ.எல்.எம். றிபாஸ், ஆலோசகர் ஐ. இஸ்தி கார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.12.2023

## மேஷம்

இன்று சாதகமான நாளாக அமையாது. உங்கள் நண்பர்கள் மற்றும் உடன் பணி புரிவோரின் மறைமுகமான எதிர்ப்புகள் காணப்படும். உரையாடும் போது கவனம் தேவை.

உங்கள் பணிகளில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் சக பணியாளர்களின் தொல்லைகள் காணப்படும். கவனக் குறைவின் காரணமாக சில நல்ல வாய்ப்புகளை இழப்பீர்கள்.

இன்று நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இதனை தவிர்த்தல் நலம்.

நிதி நிலைமை மோசமாக காணப்படும். உங்கள் தேவைகள் மற்றும் அதிகரிக்கும் செலவினங்களை எதிர்கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.

## ரிஷபம்

இன்று வளர்ச்சிக்கு உகந்த நாள். இன்றைய நாளை சரியாக திட்டமிட்டால் நீங்கள்வெற்றி பெறலாம்.உங்கள் அணுகுமுறையில் இன்று உறுதியுடன் காணப்படுவீர்கள். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று நீங்கள் விரைந்து பணியாற்றுவீர்கள். உங்களிடம் காணப்படும் நம்பிக்கையை பணியில் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் துணைக்கென நேரம் ஒதுக்குவீர்கள். இது உங்கள் இருவருக்கும் இடையே உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும். உங்கள் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் உங்கள் சேமிப்பு உயரும்.

## மிதுனம்

நீங்கள் வெளிப்படையாகவும் விஷயங்களை லேசாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும்.அனுசரனையான போக்கை மேற்கொள்ள வேண்டும்.அமைதியாக இருங்கள். அனைத்தும் நல்லபடியாக நடக்கும்.

இன்று கவனமுடன் பணியாற்றுங்கள். கவனச் சிதறலுக்கு இடம் அளிக்காதீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் திணிக்காதீர்கள். அவருடைய உணர்வுக்கும் மதிப்பு கொடுப்பதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

அதிகப்படியான செலவுகள் கவலையை அளிக்கும். நீங்கள் சிறப்பாக சேமிக்க ஒரு திட்டத்தை அமைத்துப் பின்பற்ற வேண்டும்.

இன்று வயிறு உப்பசம் ஏற்படலாம். உங்கள் உணவில் கவனம் செலுத்தவும்.

## கடகம்

இன்று பொறுப்புகளும் பதட்டமும் காணப்படுவதால் பக்தியுடன் ஸ்லோகம் சொல்வதன் மூலம் நீங்கள் உங்கள் மனதை அமைதியாக வைத்துக் கொள்ள முடியும். இசையைக் கேட்பதன் மூலமாகவும் உங்கள் மனதை பதட்டமின்றி வைத்துக் கொள்ள முடியும்.

சக பணியாளர்களிடம் நல்ல விதமாக நடந்துகொள்ளுங்கள். அவர்களைக் கவனமுடன் கையாளுங்கள்.

இன்று உங்கள் துணையிடம் மனம் திறந்து உணர்வுகளை பகிர்ந்து கொள்வது நல்லது. இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

உங்களிடம் குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவில் முதலீடு செய்யும் முடிவைத் தவிர்த்தல் நல்லது.

கணுக்கால் மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. யோகா மேற்கொள்வது ஆறுதலைத் தரும்.

## சிம்மம்

இன்று உற்சாகத்துடனும் ஆற்றலுடனும் இருக்க வேண்டும். கவலைகளுக்கு இடம் அளிக்க வேண்டாம். எப்பொழுதும் நல்லதையே நினைக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை முன்னுரிமைப்படுத்தி செயலாற்றுவதன் மூலம் பணியில் பின் தங்குவதை தவிர்க்கலாம்.

உங்கள் ஈகோவைத் தவிர்ப்பது நல்லது. நல்ல புரிந்துணர்வையும் அன்பையும் வெளிப்படுத்துவது உங்கள் உறவுக்கு நல்லது.

உங்கள் வீட்டின் முன்னேற்றத்துக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

## கன்னி

இன்று உங்களுக்கு சிறந்த பலன்கள் கிடைக்கும்.நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.பிறரிடம் உரையாடும் போது கவனித்து உரையாட வேண்டும்.

பணிகளில் திறமைகளை வெளிப்படுத்தி உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள். சிக்கலான பணிகளையும் கவனமாகவும் எளிதாகவும் கையாள்வீர்கள். இன்று உங்கள் வளர்ச்சி உறுதி.

உங்கள் துணையிடம் இனிமையான உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

உங்களிடம் காணப்படும் பணம் போதுமானதாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

அவநம்பிக்கை எண்ணங்களை தவிர்த்து விடுங்கள். இதனால் எப்பொழுதும் ஆரோக்கியமாக இருக்கலாம்.

## துலாம்

இன்று புதிய தொடர்புகள் ஏற்படும். அவர்களின் ஆதரவு கிடைக்கும்.இன்று முழுவதும் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.உங்கள் சாதனைகள் குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

நீங்கள் சிக்கலான பணிகளையும் எளிதாக கையாள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியைத் தரும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிட்டும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வது நல்லது. இதனால் இருவரும் மகிழ்வுடன் இருக்க முடியம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வகையில் அது கிடைக்கப் பெறலாம்.

இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். யோகா செய்வது ஆரோக்கியத்துக்கு நல்லது.

## விருச்சிகம்

உங்களுக்குச் சிறந்த பலன்கள் கிடைக்கும். ஆனால் மெதுவாகத் தான் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பை மட்டுமே நீங்கள் நம்ப வேண்டும். முக்கியமான செயல்கள் செய்வதை இன்று தவிர்க்கவும்.

உங்கள் பணிகளை திட்டமிட்டு அதற்கேற்றாற் போல செயலாற்றுங்கள். இதன் மூலம் பணிகளை நல்ல தரத்துடன் உரிய நேரத்தில் முடிக்க இயலும்.

உங்கள் துணையுடன் சிரித்து பேசி பழகுங்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். உரையாடும் போது தெளிவாக பேசவும்.

பணத்தை மிகுந்த கவனமுடன் கையாளவும். அதுவும் குறிப்பாக பயணத்தின் போது கவனம் தேவை. குறைந்த அளவு பணமே எடுத்துச் செல்லவும்.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.12.2023




இன்று முழுவதும் நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.இன்று உங்கள் பொறுமை சோதிக்கப்படும்.முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

பணியிடத்தில் கவனச் சிதறலுக்கு ஆளாகாதீர்கள். அதனால் தவறுகளை தவிர்க்க முடியும்.

இருவருக்கும் இடையிலான கருத்து வேற்றுமையை தவிர்க்கவும். மகிழ்ச்சியாக இருபதற்கு முயற்சி செய்யவும்.

உங்கள் செலவுகளை கண்காணிக்கவும். பணத்தை கவனமாக கையாளவும். எதிர்மறையான எண்ணங்களைத் தவிர்க்கவும்.

தோள்களில் வலி ஏற்படலாம். தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




வேறு எந்த நாளையும் விட இன்று நீங்கள் வெற்றி காண்பீர்கள். உங்கள் அணுகு முறையில் உறுதி காணப்படும். சுய முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். உங்கள் கடின உழைப்புக்குப் பலன் கிடைக்கும்.

இனிமையான பேச்சு மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். அவரை விரும்ப ஆரம்பிப்பீர்கள். இது அவருக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்களிடம் அதிக பணம் காணப்படும். வெளி நாட்டிலிருந்து பணம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பாராமரிப்பீர்கள். ஆரோக்கியத்தைத் தக்க வைக்க சத்தான உணவை உண்ணவும்.




இன்று உங்களுக்கு சிறந்த நாள். உங்கள் நீண்ட நாள் ஆசை நிறைவேறும் நாள்.இது உங்களுக்கு மிகுந்த திருப்தியை அளிக்கும்.நீங்கள் மிகவும் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணிகள் பாராட்டைப் பெறும். இது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இருவருக்கும் இடையே நல்ல அன்பு மலரும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். அத்தியாவசியமான நோக்கங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். நன்றாக உண்டு உறங்குவதன் மூலம் சிறந்த ஆரோக்கியத்தை தக்க வைத்துக் கொள்ளலாம்.




விரைவான திடீர் முடிவுகளை இன்று எடுக்காதீர்கள். யோசித்து அதற்கேற்றாற் போல் செயல்படவேண்டும். உங்கள் எண்ணத்திலும் செயலிலும் பக்குவம் தேவை.

பணியிடத்தில் தொழில் சார்ந்த அணுகுமுறை தேவை. எந்தவிதமான கவனச் சிதறலுக்கும் ஆளாகாதீர்கள்.

பாதுகாப்பற்ற உணர்வோடு உங்கள் துணையுடன் பழகாதீர்கள். இது உங்கள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். அதிகமாக சேமிக்க வேண்டும்.

முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும்.







## இலங்கை, இந்திய, பிரிட்டன் அரசுகள்

# மலையகத் தமிழர்களின் குறை வளர்ச்சிக்கு கூட்டுத் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டும்!

## மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்து




"இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களின் குறை வளர்ச்சிக்கு இலங்கை, இந்திய, பிரிட்டன் அரசுகள் கூட்டுத் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டும் என உரக்கக் கூறி வைக்க விரும்புகின்றேன். நண்பர் இராதாகிருஷ்ணன் இந்த மகத்தான நிகழ்வை நடத்தி, மலையகத் தமிழ் மக்களின் வரலாற்று, நிகழ்கால அவலங்களை, உரை, கலை வடிவங்களில் இந்த மேடையில் கூற வைத்து விட்டார். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் என்ற முறையில் எனக்கு ஒரு கடப்பாடு இருக்கின்றது. வரலாறு, நிகழ்கால அவலங்களுக்கு அப்பால் நாம் இன்று எங்கே, எப்படி நிற்கின்றோம், எங்கே, எப்படி போக வேண்டும் என்ற எதிர்காலம் கூற வேண்டிய கடப்பாடு எனக்கு இருக்கின்றது."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணி சார்பில் இராதாகிருஷ்ணன் எம்.பி. தலைமையில் நுவரெலியாவில் நடைபெற்ற '200இல் மலையக மாற்றம்' விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

"இந்நாட்டின் சிங்கள, ஈழத்தமிழ், முஸ்லிம் சகோதர இனத்தவர் தங்கள் ஓட்டங்களை 1948லேயே ஆரம்பித்து விட்டார்கள். மலையகத் தமிழர் தமது குடியுரிமையைச் சட்டப்படி முழுமையாகப் பெற்றுக்கொள்ளவே 2003ஆம்



ஆண்டு ஆகிவிட்டது. ஆகவே, நாம் எமது ஓட்டத்தை தாமதமாக ஆரம்பித்த பிரிவினர் ஆகும். ஆகவே, எமது அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார அடைவுகள், சகோதர இனத்தவர்கள் அடைந்துள்ள, இலக்குகளை விட குறைவாக இருப்பது ஆச்சரியம் அல்ல. ஆனால், இந்த இருபது வருடங்களில் ஏனையோர் மரதன் ஓடும் போது நாம் நூறு மீற்றர் ஓடி வேகமாகப் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளோம். எனினும், இன்னமும் நாம் போக வேண்டிய தூரம் கணிசமாக இருக்கின்றது.

நாம் அடைய வேண்டிய வளர்ச்சியை அடையாமல் குறைவளர்ச்சியில் நிற்கின்றோம். மலையகத் தமிழரின் குறை வளர்ச்சிக்கு இலங்கை, இந்திய, பிரிட்டன் அரசுகள் கூட்டுப் பொறுப்பேற்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் வரும் போதெல்லாம், 1948இல் இலங்கையின் அந்நிய செலவாணி தொகை ஆசியாவிலேயே ஜப்பானுக்கு அடுத்தபடியாக அதிகமாக இருந்தது என்று பெருமையாகக் கூறுவார். அது உண்மை. அதன் பின்னுள்ள கசப்பான உண்மை என்ன? அந்த அதிக தொகை அந்நிய செலவாணியை இரத்தம், வியர்வை, கண்ணீர் சிந்தி பெற்று தந்தது நமது மக்களின் தேயிலை, இறப்பர் பெருந்தோட்ட உழைப்பினால் கிடைத்த ஏற்றுமதி வருமானம் ஆகும். ஆனால், இதற்காக 1948 இலேயே முதல் சுதந்திர இலங்கை அரசு எமக்கு செய்த கைமாறு என்ன? எமது குடியுரிமையையும், வாக்குரிமையையும் பறித்து எம்மை நாடற்ற மக்கள் ஆக்கியதே அந்தக் கைம்மாறு ஆகும்.

1964இல் எம்மைக் கலந்தாலோசித்து எமது உடன்பாடுகளைப் பெறாமலேயே இந்திய அரசு, எம்மில் பெரும்பான்மையோரை நாடு கடத்த உடன்பாடு தெரிவித்தது. அன்று ஏற்படுத்தப்பட சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம் மூலமாக எமது மக்கள் கால்நடைகள் போல் நாடு கடத்தப்பட்டு, இங்கே நாம் அரசியல் ரீதியாகப் பலவீனப்படுத்தப்பட்டோம். இந்த ஒப்பந்தம் எமக்கு இழைக்கப்பட்ட பெரும் துரோகம் ஆகும்.

1972 வரை நாம் குடியரசு ஆகவில்லை. அதுவரை பிரிட்டிஷ் மகாராணியார்தான் எமது தேசத் தலைவராக இருந்தார். நாம் டொமினியன் சிலோன் என்ற நாடாக இருந்தோம். எம்மை 200 வருடங்களுக்கு முன்னர் இங்கே கொண்டு வந்தவர்களும் அவர்கள்தான். 1948இல் எமது குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்ட போதும், 1964இல் நாடு கடத்தல் ஒப்பந்தம் செய்யப்பட்ட போதும் பிரிட்டிஷ் மகாராணியார் கண்ணை மூடிக் கொண்டு இருந்தார். இந்த ஒப்பந்தம் பிரிட்டிஷ் அரசால் எமக்கு இழைக்கப்பட்ட பெரும் துரோகம் ஆகும்.

இந்த வரலாற்றின் காரணமாக, எமது எதிர்கால வளர்ச்சிக்கு உதவிட வேண்டிய தார்மீக கடப்பாடு இன்று, இந்திய, பிரிட்டன் அரசுகளுக்கு உண்டு. அதை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களும், இங்கிலாந்து பிரதமர் ரீஷி சுனக் அவர்களும் நிறைவேற்ற வேண்டும் எனக்கோருகிறேன். கடந்த வாரம் நானும், இராதாகிருஷ்ணனும் இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் அன்ரூ பெட்ரிக்கை சந்தித்த போது, இதை நான் அவருக்கு தெளிவாக எடுத்து கூறினேன். அவரது இன்றைய பிரிட்டிஷ் மன்னர் சார்ள்சின் அரசு எமக்கு உதவிட வேண்டும். இந்தியாவின் கடப்பாடு பற்றி நான் பலமுறை இந்திய தலைவர்களிடம் எடுத்துக் கூறியுள்ளேன்.

இலங்கையின் கடப்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் நிறைவேற்ற வேண்டும். எனது கருத்தை இவர்களுக்கும் நான் பலமுறை எடுத்துக் கூறியுள்ளேன்." – என்றார்.

# இலங்கை தமிழர்களின் நலனை காக்க இரட்டை குடியுரிமை வழங்கவேண்டும்

## மத்திய அரசை வலியுறுத்தி அ.தி.மு.க. செயற்குழு, பொதுக்குழுவில் தீர்மானம்







இலங்கை தமிழர்கள் நலன் காக்க இரட்டை குடியுரிமை வழங்க மத்திய அரசை வலியுறுத்தல் உள்ளிட்ட 23 தீர்மானங்கள் அ.தி.மு.க. செயற்குழு-பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மக்களவைத் தேர்தலில் புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் வெற்றி பெறும் வகையில் தொண்டர்கள் களப் பணி ஆற்ற வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சென்னை வானகரத்தில் அ.தி.மு.க. செயற்குழு, பொதுக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. ஸ்ரீவாரு மண்டபத்தில் அ.தி.மு.க. அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமையில் கூட்டம் கூடியது. பொதுக்குழு மேடையில் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா படங்களுக்கு இ.பி.எஸ். மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்ட பின்னர் நடக்கும் முதல் பொதுக்குழு கூட்டம் இதுவாகும்.

இந்த நிலையில், அ.தி.மு.க. செயற்குழு -பொதுக்குழுவில் 23 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன விபரம் வருமாறு:

இலங்கை தமிழர்கள் நலன் காக்க இரட்டை குடியுரிமை வழங்க மத்திய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற மக்களவையில் அத்துமீறல் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் நாடாளுமன்றத்தில் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

நாடாளுமன்ற தேர்தலையொட்டி குளறுபடி இல்லாத வாக்காளர்கள் பட்டியல் அமைக்க தேர்தல் ஆணையத்திற்கு வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எதிர் வரும் மக்களவைத் தேர்தலில் புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் வெற்றி பெறும் வகையில் தொண்டர்கள் களப்பணி ஆற்ற வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி துணைத்தலைவர் இருக்கை தொடர்பாக மரபுகளை கடைப் பிடிக்காத பேரவைத்தலைவருக்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மீனவர்நலனை பாதுகாக்க கச்சத்தீவை மீட்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அவசர கதியில் பொது பாடத்திட்டத்தை அமல்படுத்த நினைக்கும் தமிழ்நாடு அரசுக்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் உள்ள இஸ்லாமியச் சிறைவாசிகளை விடுதலை செய்ய வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

புயலின் தாக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மக்களை காப்பாற்றி மறுவாழ்வு அளிக்க வேண்டிய கடமை மத்திய அரசுக்கும் உண்டு என்பதை உணர்ந்து தேவையான நிதி உதவியை தமிழ்நாட்டுக்கு வழங்க முன்வர வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் பெரும்பாலானவை தி.மு.க. அரசுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் அமைந்துள்ளன.

# இமாச்சல பிரதேசத்தில் வேகமாக பரவும் காட்டுத் தீ!

இமாச்சல பிரதேசத்தின் குல்லு மாவட்டத்தில் உள்ள பாட்லிகுஹால் வனப்பகுதியில் நேற்று முன்தினம் காட்டுத்தீ ஏற்பட்டது. காற்றின் வேகம் காரணமாக ஏனைய இடங்களுக்கும் தீ பரவி வருகிறது.

இதனால் ஏராளமான மரங்கள் தீக்கிரையாகின. காட்டுத்தீயில் சிக்கி வன விலங்குகளும் உயிரிழந்திருக்கலாம் என கருதப்படுகிறது. எங்கு திரும்பினாலும் புகை மண்டலமாக காட்சியளிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.



இந்த தீ விபத்தில் கோடிக்கணக்கான ரூபா மதிப்பிலான வன வளம் அழிந்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த நிலையில், காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் பணியில் வனத்துறை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# முன் எப்போதும் இல்லாத போரை எதிர்கொள்கிறோம்

## - ஹமாஸ் தலைவர் யாயா சின்வர் கருத்து



முன் எப்போதும் எதிர்கொண்டிராத போரை தற்போது எதிர்கொண்டு வருகிறோம் என ஹமாஸ் தலைவர் யாயா சின்வர் முதன்முறையாக வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் இயக்கம், கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் நடத்தியது. காசாவின் எல்லையோரத்தில் உள்ள இஸ்ரேலின் நகரங்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

துப்பாக்கி ஏந்திய ஹமாஸ் இயக்கத்தினர் வீதி வீதியாகச் சென்று இஸ்ரேலியர்களை சுட்டுக்கொன்றனர். இந்தத் தாக்குதலை அடுத்து, இஸ்ரேல் பதிலடி கொடுக்கத் தொடங்கியது. இரு தரப்புக்கும் இடையேயான இந்தப் போர் 2 மாதங்களைக் கடந்து நடந்து கொண்டிருக்கிறது. இந்தத் தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்டவர் அதன் தலைவர் யாயா சின்வர் என கூறப்படுகிறது. ஒக்டோபர் 7 ஆம் திகதிக்குப் பின்னர் முதன் முறையாக இது குறித்து கருத்து தெரி வித்துள்ளார்.

அவர் தெரிவிக்கையில், "ஹமாஸின் இராணுவப் பிரிவான அல் கஸ்ஸாம், கடுமையான, முன் எப்போதுமில்லாத போரை எதிர்கொள்கிறது. இஸ்ரேல் பாதுகாப்புப் படையை நசுக்கும் பாதையில் அல் கஸ்ஸாம் உள்ளது. ஆக்கிரமிப்பாளர்களிடம் ஹமாஸ் ஒருபோதும் அடிபணியாது.

இஸ்ரேல் இராணுவத்தைச் சேர்ந்த 5 ஆயிரம் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படையினரை நாங்கள் குறிவைத்தோம். அவர்களில், 1,500 இற்கும் மேற்பட்டோரை நாங்கள் கொன்றுள் ளோம். எங்கள் தாக்குதலில் 3,500 இற்கும் மேற்பட்ட இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் படுகாயமடைந்துள்ளனர். 750 இஸ்ரேலிய இராணுவ வாகனங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல் கஸ்ஸாம் அழித்துள்ளது" என்றார்.

யாயா சின்வரின் இந்த தரவுகளை இஸ்ரேல் திட்டவட்டமாக மறுத்துள்ளது. இஸ்ரேல் நடத்தி வரும் தொடர் தாக்குதல்களால் அல் கஸ்ஸாம் கடுமையான அழுத்தங்களை சந்தித்து வருவதாகவும், அதன் காரணமாகவே தங்கள் படையினரை ஊக்கப்படுத்தும் நோக்கில் மிகைப்படுத்தப்பட்ட தரவுகளை யாயா சின்வர் கூறி இருக்கிறார் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

காசாவில் தரைப்படை மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கையில் இதுவரை 156 வீரர்கள் மட்டுமே கொல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

மேலும், 200 இற்கும் குறைவான பாதுகாப்புப் படையினரே காயமடைந்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

வாகனங்கள் மீதான தாக்குதலைப் பொறுத்தவரை, சரியான எண்ணிக்கை தங்களிடம் இல்லை என தெரிவித்துள்ள இஸ்ரேல் பாதுகாப்புப் படை, அதேநேரத்தில் சில வாகனங்கள் மட்டுமே பழுது பார்க்க முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளதாகவும், மற்ற வாகனங்கள் உடனடியாக பழுது பார்க்கப்பட்டு மீண்டும் களத்துக்குத் திரும்பி இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இஸ்ரேல் தனது இலக்குகளை நோக்கி படிப்படியாக முன்னேறி வருகிறது என்று தெரிவித்துள்ள அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலண்ட், எங்கள் துப்பாக்கி குண்டுகளை யாயா சின்வர் விரைவில் சந்திப்பார் என்றும் எச்சரித்துள்ளார்.

# பாகிஸ்தான் பொது தேர்தலில் களமிறங்குகிறார் இந்து பெண்



பாகிஸ்தான் நாடளுமன்ற பொதுத் தேர்தலில் முதல் முறையாக இந்துப் பெண் ஒருவர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தானின் 16 ஆவது நாடாளுமன்ற பொதுத்தேர்தல் எதிர்வரும் 2024 பெப்ரவரி 8 ஆம் திகதி நடைப் பெறவுள்ளது.

அந்த வகையில், பாகிஸ்தானில் இந்து மதத்தை சேர்ந்த சவீரா பர்காஷ் பொதுத்தேர்தலில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார்.

இதனூடாக பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் போட்டியிடும் முதல் இந்துப் பெண் என்ற பெருமையை சவீரா பர்காஷ் பெற்றுள்ளார்.

அதேவேளை கடந்த 2022 ஆம் ஆண்டு அபோதாபாத் சர்வதேச மருத்துவக் கல்லூரியில் மருத்துவர் பட்டம் பெற்ற சவீரா, தனது படிப்பை முடித்தவுடன் அரசியல் களத்தில் நுழைந்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், 'பாகிஸ்தான் பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடுவேன். அவர்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்க விரும்புகிறேன். பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகளை ஒழிப்பதே முதல் முன்னுரிமை. எனது தந்தையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அரசியல் பணிகளை மேற்கொள்ள விரும்புகிறேன்' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.